# நீங்கள் உங்கள் நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்று எப்படி நிச்சயமாக சொல்கிறீர்கள்? நிகழ்ச்சி -2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில், எப்போதும் கேட்கப்படும் முக்கியமான மதம் சார்ந்த கேள்வி: “உங்களுடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயம் இருக்கிறதா?”

**டாக்டர். எர்வின் லட்சர்:** நீங்கள் மரித்த அடுத்த விநாடியில் நீங்கள் ஒருவேளை அழகான சூழலை, கிறிஸ்துவின் மகிமையை பரலோகத்தை காண்பீர்கள். அல்லது நீங்கள் இன்று கற்பனை செய்து பார்க்க முடியாத பயங்கரமான சூழலை காண நேரிடும். அதை குறித்து யோசிப்பதை நிறுத்திவிட்டாலும், நமக்குள் எழும்பும் முக்கிய கேள்வி இதுதான், “என்னுடைய நித்தியத்தை எங்கே செலவிடப்போகிறேன்?”

**அறிவிப்பாளர்:** இந்த கேள்விக்கு பதிலளிக்க இருப்பவர், ஜானுடைய இன்றைய விருந்தினர் டாக்டர். எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் தலைமை போதகர் சிக்காகோ, இலினாசிஸ்.

அவர் மேலும் சில கேள்விகளுக்கும் பதிலளித்திடுவார்:

ஆதியில் தேவனோடு உறவு வைத்து விசுவாசிகளாக இருந்து பின்னர் தங்கள் வாழ்வில் விசுவாசித்திலிருந்து பின்வாங்கியவர்களைக் குறித்து வேதம் என்ன போதிக்கிறது?

ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிடாமல் மரிக்கும்போது தேவனுக்கு அவனுக்காக செய்த செயல்களை அவை ரத்து செய்திடுமா?

நாம் இன்றைக்கு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் நாளை இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றென்றைக்கும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்ற நிச்சயம் அடைவது எப்படி?

இந்த பிரத்தியேக நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம் இது ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சி.

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நாம் பேசிக்கொண்டிருக்கும் தலைப்பு, "நித்தியத்தை தேவனோடு தான் செலவிடுவீர்கள் என்று உங்களுக்கு நிச்சயம் இருக்கிறதா." இதை விட மிக முக்கியமானதென்று ஏதாவது இருக்கிறதா? அதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும். சரி, சிலர் இதை அறிந்திட முடியாது என நினைக்கிறார்கள். வேதம் சொல்கிறது நீங்கள் தெரிந்துகொள்ள முடியும், எப்படி நிச்சயமாய் அறிந்துகொள்வதென்பதை நாங்கள் உங்களுக்கு விளக்கமாக சொல்ல இருக்கிறோம். உண்மையில், இன்றைக்கு நமது தலைப்பு "ஏன் கிருபை அருமையானதாக இருக்கிறது?"

நம் அனைவருக்கும் தெரிந்த பகுதி எபேசியர் 2:8: “கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, அது தேவனுடைய ஈவு. எந்த மனிதனும் பெருமைபாராட்டாதபடிக்கு அவை கிரியைகளினால் உண்டானதல்ல.” ஆனால் இந்த வார்த்தைகளின் ஆழத்தை நாம் புரிந்துகொள்ளவில்லை என நினைக்கிறேன். என்னுடைய சிறந்த நண்பரான, டாக்டர். எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் போதகர், இங்கிருக்கிறார். இந்த தலைப்பில் அவர் சிறப்பான புத்தகத்தை எழுதியிருக்கிறார் அதை நாம் ஒன்றாக இணைந்து பார்த்து வருகிறோம், எங்களுடைய நோக்கம் நீங்கள் தேவ வார்த்தையின் சத்தியத்தை அறிந்துகொண்டு அதிலிருந்து உண்டாகும் தொனியை கேட்டு கிருபை என்ன என்பதை புரிந்துகொள்ளும் போது உண்டாகும் ஆனந்தத்தை காண வேண்டும் என்பதே.

**லட்சர்:** எல்லாருக்கும் தெரிந்த ஒரு பாடல், “அமேசிங் கிரேஸ்”. ஆனால் அவர்களுக்கு தெரியாத விஷயம் எப்படிபட்ட சூழ்நிலையில் அந்த பாடல் எழுதப்பட்டது என்பதுதான். முதலாவதாக, ஜான் நியூடன் இழிவான பெயர்பெற்ற பாவி. உண்மையில் சொன்னால், அவர் ஜனங்களுக்கு பரிசுகொடுக்க தீர்மானித்தார் அதாவது யாராவது அவர் இதுவரை செய்திராத பாவத்தை யோசித்து சொல்லமுடியுமா என்றார். அவர்தான் இவர். 1748ல், அவர் அப்போது பிரேஹவுன்ட் என்ற கப்பலில் இருந்தார். அப்போது கோரமான புயல் எழும்பியது. அதாவது,

அவர்களை இடித்து நாசமாக்கியது. அவர்கள் கிட்டத்தட்ட மூழ்கும் நிலை உண்டானது. ஆப்போது நியூடன் மாலுமியை பார்த்து, “தேவன் நம்மீது இரக்கம் காட்டாவிட்டால், நாம் நிச்சயம் மூழ்கிடுவோம் என்றார்.” அந்த மாலுமி அதிர்ந்துபோனார், ஏன்னா இவர் கடின இருதயமுள்ளவர், தேவனை நித்திப்பவர், குடிகாரன், அடிமையாய் நடத்திடம் நபர் சொல்கிறார், “தேவன் நம்மீது இரக்கம் காட்டாவிட்டால், என்னவாகும்?”

எனவே, எல்லாருமே அன்றைக்கு மாலுமியாக இருந்து அதை தாக்குபிடித்து மிதக்கச் செய்ய முயற்சித்தனர். நியூடனிடம் அவர் தாய் அவருக்கு அளித்த பைபிள் இருந்தது, அந்த கப்பலில் அவர் சில வார்த்தைகளை வாசித்தார். இப்ப, இந்த சூழலை நினைத்துபாருங்க. இது நீதிமொழிகளில் இருந்து வந்தது, அவர் அதை வாசிக்கிறார், என்ன வாசித்தார் என்றார், “என் கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள் இதோ என் ஆவியை உங்களுக்கு அருளுவேன் என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன். நான் கூப்பிட்டும் நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள், நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளி என் கடிந்துகொள்ளுதலை வெறுக்கிநீர்கள்.ஆகையால் நானும் உங்கள் ஆபத்துக்காலத்தில் நகைத்து -நீங்கள் பயப்படுங்காரியம் புசல்போல் வரும்போது ஆபத்து சூறாவளிபோல் உங்களுக்கு நேரிடும்போதும் ஆகடியம் பண்ணுவேன்.” (நீதி.1:23-27

**ஆன்கர்பெர்க்:** இந்த வார்த்தை அப்படி பளார்ன்னு அறைவதுபோலிருக்கிறது!

**லட்சர்:** ஜரட்! மரணத்தை கண்டு பயந்தார். உண்மையாகவே, கற்பனை செய்யமுடியும், அங்க புயல் அடங்கியிருக்கும் பயணிகள் சமாளித்திருப்பாங்க. ஆனா, நியூடன் வேதத்தை வாசிக்க ஆரம்பித்தார். என்னுடைய புத்தகத்தில் அவர் சொல்லியதை நான் குறிப்பிட்டிருக்கிறேன் அதை வாசிக்கட்டுமா?

அவர் அங்கு, “என்னுடைய பாவங்களுக்கு தூஷனங்களுக்கும் தண்டனை கொடுக்க பரிசுத்த தேவனுக்கும் எனக்கும் நடுவில் ஒருவர் இருக்க வேண்டுமென விரும்புகிறேன். என் சூழ்நிலைக்குள் வந்து என் பாவங்களை என்னை விட்டு எடுத்துப்போட எனக்கு ஒரு சர்வவல்ல இரட்சகர் வேண்டும். நான் மன்னிக்கப்படும்படியாக கிறிஸ்து என் பாவத்திற்காக தண்டிக்கப்பட்டதை கண்டேன் என்கிறார்.” அந்த ஆச்சரியதுல எழுதினது தான், “அமேசிங் கிரேஸ், என்னைப்போன்ற பாவியை இரட்சித்தது என்னவொரு அற்புதமான செயல்.”

ஆனா ஜான், அநேகர் இந்த கிருபை எவ்வளவு அருமையானது என்று உண்மையில் புரிந்துகொள்வதேயில்லை. எனக்கு நினைவிருக்கிறது சிக்காகோவில் ஒரு செய்தி தொகுப்பாளர் ஒருமுறை ஒரு செய்திதாளில் இப்படியாகச் சொல்லியிருந்தார்: “ஒருநாளில் நிச்சயம் என்னுடைய ஆவிக்குரிய வாழ்வில் தேனோடு நடப்பதில் கவனம் செலுத்துவேன், அது எனக்கு அவசியமாக கண்டால் செய்வேன்.” அவர்,

சொல்றது, என்னன்னா, “நான் கிருபையின் தளத்தில் இல்லை, ஆனா செயல்படவேண்டும் என்ற நிலை வந்தால் என்னால் செயல்பட முடியும் என்று கூறுகிறார்.”

சரி, எளிதாக சொன்னால், ஜான், இதிலிந்து அவர் இன்னும் சரியாக புரிந்துகொள்ளவில்லை என புரிகிறது. கிருபையின் தன்மையை அவர் புரிந்துகொள்ளவில்லை. ஏனென்றால் நம்முடைய நிலையை மாற்ற நம்மால் ஒன்றும் செய்ய முடியாது, அது எவ்வளவு இக்கட்டானதாக மாறினாலும் ஒன்றும் நடக்காது. நம்மால் அதை சரிசெய்ய முடியும் என்ற சிந்தை நமக்கு இருக்கும் வரை, நாம் கிருபையை புரிந்துகொள்ள முடியாது, அது தேவன் தகுதியற்ற நமக்கு அளிக்கும் தயவு.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், தொடர்ந்து இதனோடு மற்ற காரியங்களை இணைத்து பேசிடலாம். ஜனங்களில் பலருடைய கருத்து இதுதான், “அதாவது. கிருபை அவசியமானது” அதனால் கிருபையை பெறும்படியான கூட்டங்களை நடத்துகிறார்கள். ஆனால் அப்படிபட்ட கிருபைக்கான நிகழ்ச்சிகள், அதில் பாதி தேவனுடைய கிருபை மீதி பாதி அவர்களுடைய கிரியையாக இருக்கிறது. அவர்கள் இன்னும் அதை சரிவர பகுக்கவில்லை.

**லட்சர்:** இல்லை, அப்படி செய்யல.

**ஆன்கர்பெர்க்:** ஏன் என்று சொல்லுங்க, ஏன்னா அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதல்லை.

**லட்சர்:** அது ஏன் என்றால், பலருடைய மனதில், கிருபை உதவுவதாயிருக்கிறது. சரி, எளிதாக சொன்னால், நமக்கு உதவி தேவையில்லை, நமக்கு உயிர்தெழுதல் அவசியம். அதாவது, எபேசியர் 2ல், அப்போஙதலனாகிய பவுல் சொல்கிறார் கிறிஸ்துவிடம் வருவதற்கு முன்பு, நாம் நம்முடைய அக்கரமத்திலும் பாவத்திலும் மரித்துப்போயிருந்தோம். இப்ப, நீங்க ஒரு கல்லரையில் நடப்பதாக கற்பனை செய்து பாருங்கள் அப்ப நீங்க, “சரி, இந்த கல்லறையில் இருக்கிற இந்த பிரேதங்கள் உயிரடைய நான் விரும்புகிNறுன். ஆனா நான் போய், அவர்களுக்கு சிறிது உதவி செய்ய வேண்டும் என்பீர்களா.” இல்லை. அவர்களுக்கு உதவி அவசியமில்லை. அவர்களுக்கு தேவனுடைய கரங்களிலிருந்து அபரிமிதமான அற்புதம் தான் அவசியமாயிருக்கு. உதவி செய்யக் கூடிய கட்டத்தை அவர்கள் தாண்டி நிற்கிறார்கள். நாமும் கிறிஸ்து இல்லாமல் இப்படிப்பட்ட நிலையில் தான் இருக்கிறோம். உண்மையில், அப்போஸ்தலனாகிய பவுல் இதை தெளிவாக சொல்கிறார், “நீங்களோ, உங்கள் அக்கிரமங்களினாலும் பாவங்கிளினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். நீங்கள் இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும் ஆகாயத்து அதிகாரப்பிரபுவுக்கு ஏற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்.” (எபே. 2:1-2). அதை அவர், அதிகாரத்தோடு, சொல்கிறார் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டிருந்தோம். அதை நாம் அறியவில்லை, அப்படிதான் இருந்தோம். மேலும், அவர் தொடர்ந்து நாம் அப்படிதான் இருந்தோம்

என்கிறார் ஏனென்றால் நம்முடைய சுய இச்சைகளினால் நடப்பத்பட்டுக் கொண்டிருந்தோம். இதுதான் நம்முடைய நிலையாக இருக்கிறது. இப்ப கேள்வி என்னவென்றால், இப்படிபட்ட நிலையில் இருக்கும் நாம் எப்படி அடுத்தவருக்கு உதவ முடியும், சரி, இது புரிகிறதா, அவர்கள் பாவங்களினாலும் அக்கிரமங்களினாலும் மரித்துபோயிருக்கிறார்கள், அதனுடைய அர்த்தம் அவர்களால் கோலாரேடோல ஸ்கையிங் செய்ய முடியாது என்பதல்ல. அதனுடைய அர்த்தம் அவர்களால் கடைக்கு சென்று காய்கறிகள் வாங்கமுடியாது அல்லது கச்சசேரிக்கு போக முடியாது, சந்தோஷமில்லாம இந்த நிகழ்ச்சிய பார்க்க முடியாதென்பதல்ல. இவை அனைத்தையும் செய்ய முடியும். ஒரு காரியத்தை அவர்களால் செய்ய முடியாது, அதுதான், அவர்களுக்கு வாழ்வை அளிப்பதாக இருக்கிறது. அவை தேவனிடத்திலிருந்து வரவேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** கவனிங்க, கிருபையை குறித்து பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கு. தேவன் கொடுக்கும் கிருபை, சபையின் பரிசுத்த காரியங்களால் உண்டாவது. மேலும் கிருபையும் கிரியையும் சேர்த்து செயல்படும் போது அவர்களுக்கு பரலோகம் செல்வர் என்ற ஒருவிதமான அபிப்பிராயமும் மக்களிடையே இருக்கிறது. இதை அவர்களை நம்பச் செய்கிறார்கள், அது சபை அதிகாரத்தில் இருப்பவர்கள், அல்லது அவர்களுடைய சிறு குழுவில் இருப்பவர்கள் அப்படி செய்கிறார்கள். இப்படிபட்டவர்களைத் தவிற, இன்னும்

சிலருடைய கருத்து என்னவென்றால், "நான் சபைக்கு போவதை விட்டுவிடுவேன் ஆனா நா நல்லவனாக என்னால் இயன்ற அளவிற்கு நல்லவனாக இருப்பேன், அதை முயற்சிப்பேன், இதை குறித்து நான் மிகவும் கவனமாக இருந்திடுவேன். ஒருவரும் பூரணப்பட்டவர் அல்ல என்று தெரியும், ஆனால் நான் செய்யாத காரியத்தை, தேவனுடைய கிருபை செய்கிறது. ஆனா நானே செயல்பட தேவன் விரும்புகிறார், அதை செய்ய முயற்சிப்பதால், அதை நான் செய்துமுடிப்பேன்."

**லட்சர்:** ஜான், நீங்க ஒன்னு தெரிஞ்சுக்கனும் நாம் சொல்கிற இந்த மாதிரியான அபிப்பிராயங்களை நம்பினவர்கள் உண்மையில் அவர்களுக்கு இருக்கும் தேவைவை அவர்கள் புரிந்துகொள்வதே இல்லை, மேலும் கிருபையை குறித்த வேதாக விளக்கத்தை புரிந்துகொள்வதில்லை. துரிதமாக இந்த சடங்குகளைக் குறித்து பார்த்திடலாம்: இயேசு ஞானஸ்நானத்தையும் தேவனுடைய பந்தியையை குறித்து பேசினார், ஜனங்கள் நினைக்கிறார்கள் இதன் வாயிலாக கிருபை அளிக்கப்படுகிறது என்று. ஆனால் தேவம் தெளிவாக சொல்கிறது தேவனோடு நடப்பது அவருடைய கரங்களில் இருக்கிறதே தவிற மனிதர்களின் கரங்களிலோ அல்லது ஆசாரியர்களின் கரங்களிலோ இல்லை. தேவ்ன நேரரியாக மனிதனுடைய இருதயத்தில் கிரியை செய்கிறார். இயேசு கிறிஸ்து கூறிய சில அடையாளங்கள் தான் இவை மேலும் அவை இரட்சிப்பிற்கான வழி கிடையாது இதை பின்பற்றினால் இன்னும்

சிறப்பாக அடுத்த நிலையை அடைந்து, ஒரு கட்டத்தில், பரலோகத்தில் பிரவேசிக்க தகுதியடைவோம் என்றில்லை.

**ஆன்கர்பெர்க்:** உங்க குறிக்கோல் சரியாக இருக்கிறதென்று நினைக்கிறேன். இப்ப ஜனங்கள் சொல்வாங்க, "அதாவது, எர்வின்,கிருபைய பற்றி நா கேட்டிறாத ஒரு வித்தியாசமான விளக்கத்தை சொல்லப்போறீங்கன்றத நான் உணருகிறேன். உங்களுடைய விளக்கம் என்னன்னு எனக்கு தெரியாது. சரி, நீங்க மூடி மெமோரியல் சபையின் போதகர் இப்ப இந்த கேள்விய உங்க முன்னால நா வைக்கிறேன். உங்களுடைய விளக்கம் என்ன - வேதத்தில் இருப்பதாக நீங்கள் சொல்வது எது - இதுவரை எங்கும் பகிர்ந்துகொள்ளாத கிருபையை குறித்து விளக்கம் என்ன? மற்ற அனைத்தும் தவறானதென்று நீங்கள் சொல்கிறீர்கள், அப்படின்னா நீங்க விளக்கிடும் இந்த கிருபை என்னது?

**லட்சர்:** இங்க நா வேதத்தை பார்க்க விரும்புகிறேன். இப்ப எபேசியர் 2ல் இருக்கிறோம். பவுல் கூறுகிறார், "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம்" (வ1) அதன் பின்பு அவர் சொல்கிறார்! "நாம் கோபாக்கனையின் பிள்ளைகளாயிருந்தோம்" வசனங்கள் 4-5ல், "ஆனால் தேவனோ இரக்கத்தில் ¡சுவரியமுள்ளவராய், நம்மில் அன்புகூர்ந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார் - நீங்கள் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்."

நான் சொல்ல விரும்புகிற காரியம் இதுதான், ஜான். கிருபை என்பது தகுதியற்ற நமக்கு தேவன் அருளும் தயவு, ஆனால் நாம் இன்னும் சிறந்தவர்களாக விளங்கிட அல்லது நமது கிரியைகளுக்கு மெருகேற்ற நமக்கு உதவும்படி வழக்கப்பட்ட அவருடைய தயவு அல்ல. கிருபை என்பது இரட்சிக்கப்படுதல் முற்றிலும் தேவ செயல் என்கிறது. இயேசு லாசருவின் கல்லறையில் நிற்கும் அவர் ஒருபோதும், "சரி, நீ, லாசருவே, நீ பாதி வேலை செய் நான் மீதியை செய்கிறேன். நீ உன் கைகளை அசைத்தால், செயல்படுகிறேன் என்றிடவில்லை." அவரே எல்லாவற்றையும் செய்தார். மேலும் வேதம் சொல்கிறது இரட்சிப்பானது, தொடக்கம் முதல் முடிவு வரை, தேவ கிரியையே. ஆனா எனக்கு புரியுது ஜான், இன்றைக்கு கேட்டுக்கொண்டிருப்பவர்கள் ஒருவேளை கேட்கலாம், "சரி, ஆனா நாதானே அதை நம்பவேண்டும்." அது உண்மைதான், ஆனா அந்த நம்பிக்கையை தேவன் தூணு;டுகிறார். இன்றைக்கு கேட்டுக்கொண்டிருப்பவர்களில் யாராவது விசுவாசிக்க முன்வந்தால், அது அருமையான விஷயம். அவர்கள் முன்வரும்படி நாம் ஜெபிக்க Nவுண்டும். ஆனால் இது தேவனால் உண்டானதென்று அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய ஈடுபாடு… நீங்க இதில் ஈடுபட்டிருக்கிறீர்களா? ஆமா நிச்சயமா. நாம பாவம் நிறைந்தவர்களாய் நிற்கிறோம். ஆனா அவருடைய மேஜைக்கு வரும்போது, நம்முடைய தேவையை தவிர வேறொன்றையும் கொண்டு வருவதில்லை. கிருபை என்றால் நான் சிறந்தவனாக இருக்க வருவதில்லை, ஒரு அற்புதத்தை நாடி வருகிறேன். கிருபை என்றால் எனக்கு கொஞ்சம் உதவி

கிடைத்தால் அதை வைத்து செய்திடுவேன் என்ற எண்ணத்தோடு வருவதல்ல. நான் உயிர்ப்பிக்கப்பட வேண்டும். அதனால் தான் கிருபையானது முற்றிலும் விலையேறப்பெற்றதாய் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம் திரும்ப வந்தது நாம் பேச இருப்பது எதனால் கிருபை, என்பது, தேவன் தாமே ஆயத்தம் பண்ணி தம்மையே விலைகொடுத்து வாங்கியிருந்தும் நமக்கு அதை இலவசமாக கொடுத்து எந்த பிரதிபலனும் செய்யாமல் பெற்றுக்கொள்ள வைக்கிறார். தேவன் என்ன செய்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்வது அருமையான ஒன்று நாம் இந்த பங்கில் என்ன இருக்கிறது என்பதையும் இதற்கு தேவன் செலுத்திய விலையையும் எப்படி மக்கள் இதை பெறலாம் என்பதையும் பார்க்க இருக்கிறோம். இணைந்திருங்கள், மீண்டும் சந்திப்போம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட் மீண்டும் வருக. நாம் பேசிக்கொண்டிருப்பது டாக்டர். எர்வின் லட்சர் முக்கியமான தலைப்பை பார்த்து வருகிNறூம், நீங்க எப்படி நிச்சயமா சொல்ல முடியும், நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்று எப்படி நிச்சயமாய் சொல்ல முடியும். அந்த நிச்சயத்தை பெற விரும்புகிறீர்கள், அப்படிதானே, சரி, கிருபை என்றால் என்ன என்று பார்த்தோம். ஆமா, நமக்கு இலவசமாயிருக்கிறது. அது தேவன் நமக்கென்று ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் ஒரு பரிசு. ஆனா, எர்வின், இந்த பரிசை கொடுத்த தேவன் விலை செலுத்தியிருக்கிறார்.

பல கோணங்கள்ல இதை விளக்கிடும்படியான கதை உங்ககிட்ட இருக்குன்னு நினைக்கிறேன். இந்த கதையின் மூலம் கிருபையை பற்றி சொல்லுங்க.

**லட்சர்:** சரி, ஒரு மிஷனரி இருந்தார் இந்துக்களோடு நட்பு வைத்துக்கொண்டார். அந்த நட்பிற்கான நோக்கம் என்னவென்றால், உண்மையில், நாம் ஒருவரையொருவர் மதிப்பதுதான், அதோடு இந்த மிஷனரி இரட்சிப்பு என்பது இலவசமான ஈவு என்பதை அவர்களுக்கு விளக்க முயற்சித்தார். இப்ப நா ஒரு நிமிஷம் அந்த இரட்சிப்பு ஏன் இலவசமானதாக இருக்கிறது என்பதை சொல்ல விரும்புகிறேன். இதில் நம்மால் எந்த காரியத்தையும் செய்ய முடியாது. இயேசு கிறிஸ்து விலை செலுத்திவிட்டார். இப்ப, இந்துக்கள் இதை விலைகொடுத்து வாங்கமுடியாது, அவர்களுடைய மனிதில், இதை பெற கிரியை செய்யவேண்டும் என்ற எண்ணம் இருந்திடும். ஆனால் இந்த மிஷெனரி பயணத்தை முடிப்பதற்குள், அந்த இந்து மனிதர் அவருக்கு இதுவரை ஒருவரும் கண்டிறாத ஒரு முத்தை பரிசாக கொடுத்தார். அப்போது அவர் இவரிடம், “ இந்த முத்து என் மகன் எடுத்தது இதை எடுக்கும் முயற்சியில் அவன் மரித்துப்போனான் என்றார்.” அதற்கு அந்த மிஷெனரி, நன்றியுள்ள இதயத்தோடு, சொன்னார், “ தேங்க் யூ வெரி, வெரி மச். இதற்கு விலை கொடுக்க விரும்புகிறேன் என்றார்.”

அந்த இந்து மனிதர், உண்மையில், காயமடைந்தார். “இதற்கு என்ன அர்த்தம், விலையா? என்னுடைய மகனை நான் இழந்து

பெற்றுக்கொண்ட இந்த முத்துக்கு நீங்கள் விலை பேச முடியுமா என்று கேட்டார்.

அப்போது அந்த இந்து மனிதர் புரிந்துகொண்டார். அதனால் தான் இயேசு சிலுவையில் செய்தவற்றிற்காக நாம் தேவனுக்கு எந்த விலையும் செலுத்துவதில்லை. இயேசு நமக்காக பலியாகி நம்முடைய பாவங்களை சுமக்கிறவரானாரே அப்படியிருக்க நாம் எப்படி தேவனுடைய அன்பிற்கும் அவருடைய கிருபைக்கும் விலை செலுத்த முடியும் என நினைக்கலாம்? அடுத்த நிகழ்ச்சியில் நாம் இதைப் பற்றி அதிகம் பார்க்க இருக்கிறோம், அதனுடைய அர்த்தம் என்ன. ஆனா எந்த விதத்தில் நாம் தேவனுக்கு திருப்பி கொடுப்பது, அதனால் தான் நித்தியம் முழுவதிலும் நாம் தேவனுக்கு கடனாளிகளாக இருக்கப்போகிறோம். ஆதனால் தான் பரலோகம் துதியினால் நிறைந்து இருக்கும் என நினைக்கிறேன் இந்த பூமியில் நாம் தேவனுடைய கிருபையினால் அவருடைய கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்பட்டோம் என்பதை நாம் நினைப்பதற்கு மேலாக அதன் உண்மையின் அழகை கண்டு நாம் வியந்திடுவோம்.

**ஆன்கர்பெர்க்:** எர்வின், சில ஜனங்கள், அவர்கள், அதை கேட்டிருந்தாலும் அவர்கள் கருத்து, “பாருங்க, நா என்னுடைய அடுத்தவீட்டாரை விட சிறப்பாகதான் இருக்கிறேன்.ஓகே? இப்படி சொல்வதால் பிரயோஜனமிருக்கா? அதாவது, என்னுடைய பதிப்பில் எனக்கு உதவியாக இருக்க முடியுமா.

**லட்சர்:** முதலாவதாக, ஒன்றை சொல்லிக்கொள்கிறேன் ஒரு நபர் தன் அயலகத்தாரைவிட சிறப்பாக இருப்பதாக சொல்வதை கேட்பதில் மகிழ்ச்சி, ஆனா துரதிஷ்டவசமாக, நம்மை நாமே நியாயந்தீர்க்கும் நிலையில் நாம் இல்லை என்பது உண்மை. சரி இருக்கட்டும், பலர் தங்களை உயிர்த்திகொள்ள விரும்புகிறார்கள். ஆனா, ஜான், ஒரு காரியம் உறுதி. நாம் மறுபடியும் எபேசியர் 2:1ஐ பார்க்கலாம். நாம் நம்முடைய பாவத்திலும் அக்கரமத்திலும் மரித்திருந்தோம்" கிறிஸ்து இல்லாததால். சரி, இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கிறது - இந்த நபர் மரித்து 20 வருடங்கள் ஆகிறது அந்த நபர் மரித்துப்போய் மூன்று நாட்களே ஆகிறது. இதில் பிரயோஜனமிருக்கா? அவர்கள் உயிர்பெற வேண்டுமானால், இருவருக்கும் ஒருவிதமான அற்புதம் தான் நடக்கவேண்டும்.

எளிதான உண்மை இதுதான் நாம் அனைவரும் ஒரே கூட்டத்தின் அங்கத்தினர். அவர் செய்ததை நாம் செய்யதேவையில்லை, அதற்கு நன்றி, ஆனால் ஏற்றுக்கொள்ள வேண்டிய விஷம் நாம் எல்லாரும் பாவிகள். நாம் ஒருபோதும் மாறாக சொல்லக் கூடாது, "ஆமா, அவனுக்கு தான் தேவனுடைய மன்னிப்பு தேவை, எனக்கு இல்லை."

அலெக்சான்டர் சாலின்ஸ்டைன் அழகாக சொல்லியிருக்கிறார். அதாவது இந்த உலகத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள் கெட்டவர்களும் இருக்கிறார்கள் ஆனால் நல்லவர்கள் எல்லாரையும் ஒரு பக்கமாகவும் கொட்டவர்கள் எல்லாரையும் ஒரு பக்கமாகவும்

வைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஆனால் அந்த வரிசை நல்லவர்கள் கெட்டவர்கள் என்ற பிரிவாக இருக்காது என்கிறார். அவர் சொல்கிறார் நன்மை தீமை என்பது ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்தில் இருக்கிறதாம். உங்களுக்கும் எனக்கும் தெரியும், ஜான், பல சமயங்களில் நல்லவர்களாக இருப்பவர்கள் செய்யும் காரியங்களை நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிதென சொல்ல முடியும்.

**ஆன்கர்பெர்க்:** இந்த வரிசையிலேயே, எர்வின். இந்த கிருபையை பெற்றுக்கொள்ள தனக்கு தகுதியிருக்கிறது என நினைப்பவர்களோடு பேசிப்போகிறோம். வேறொரு கோணத்தில், தங்களை கெட்டவர்களாக எண்ணிக்கொண்டிருக்கும் மக்கள் கூட்டம் அதிகமாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வை சீரழித்துவிட்டார்கள். ஒரு நபரை மாற்ற கிருபை போதுமானது என்பதை பற்றி நீங்கள் பேச விரும்புகிறேன். உங்கள் புத்தகத்தில் உங்களை பார்க்க வந்த தம்பதியரைப் பற்றிய அருமையான உமையையும் இருக்கிறது.

**லட்சர்:** சரி, இதை நான் விளக்கி சொல்கிறேன், முதலாவதாக, இந்த கிருபையை ஏற்றுக்கொள்ள கடினப்படும் இரண்டு வகையான மக்கள் கூட்டம் இருக்கிறது. முதலாவது கூட்டம் அதிக கேடான பாவம் செய்தவர்கள், பொதுவாக பாலியல் பாவங்கள் - விபச்சாரம், போதை வியாபாரி. அவர்களுடைய யோசனை, “ நான் ரொம்ப கெட்டது செய்துட்டேன், தேவன் என்மேல் கோபமாயிருக்கிறார், நா கிருபைய பெற முடியாது.”

கிருபையை பெற்றுக்கொள்ள கடினமாக உணர்ந்திடும் அடுத்த கூட்டம் “இரண்டு காலணிகள் போட்டவர்கள், மதசடங்கை பின்பற்றுபவர். அதாவது, சமூக சேவை செய்ய தன்னார்வமாக இருப்பாங்கள்ல? தர்ம காரியங்களுக்காக பணம் கொடுத்திருப்பார்களே, அவங்களோடு எல்லா பில்லையும் செலுத்தியிருப்பாங்களே? அவங்க மேல எந்த வன்முறை குற்றமுமில்லை, அப்பறம் எதுக்கு கிருபை? ஏளிமையான உண்மை, இரண்டு கூட்டத்தாருக்கு நிச்சயம் கிருபை தேவை அவர்கள் கிருபை பெற்றுக்கொள்ள முடியும். அதனால் தான் நினைக்கிறேன்,... அதாவது, அவருடைய காலத்தில் இருந்த மதவாதிகளை விட ஒரு விபச்சாரி பரலோகத்தில் பிரவேசிப்பது எளிதாயிருக்கும் என்று இயேசு சொல்கிறார் ஏன்னா தேவனுடைய எல்லையற்ற கிருபைக்கு அவசியமில்லை என்று நினைத்தனர். (மத். 21:32). ஆதை போதைபொருள் விற்பனையாளருக்கும் விபச்சாரிகளுக்கும் கொடுத்திடலாம். அவங்களாவது ஒருவேளை நான் இரட்சிக்கப்பட முடியுன்னா, அது கிருபையால மட்டும் தான் என்பார்களே...

அதாவது, ஒருநாள், ஜான், நான் சபையில் இருந்தபோது ஒரு இளம்பம்பதியினர் முன்பாக வந்தனர் அவர்களுக்கு நான் ஆலோசனை வழங்கினேன். இதுதான் அவர்களுடைய கதை. ஓகே, அவள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டாள். ஆனால் அவங்க அடிக்கும் மனைவிகளின் கூட்டத்தை சார்ந்தவர்கள் அவள் தனது கணவரை சபைக்கு அழைத்து வந்திருந்தாள், ஆனா அவருக்கு அதில்

விருப்பமில்லை என்று நினைக்கிறேன். அவங்கதா அவரை இழுத்துட்டு வந்திருக்கனும். அவர் அந்த இடத்தில் காணிக்கை பெட்டியில் விழுந்த காசைப்போல வழியின்று தவித்துக்கொண்டிருந்தார் என நினைக்கிறேன். அவர் கட்டாயத்தால இருந்தார். அவங்க மனைவி அவர சபைக்கு இழுத்துட்டு வந்திருந்தாங்க கூட்டம் முடிந்ததும் முன்னால வந்தாங்க. அவர் சொன்னார், “அடிக்கும் மனைவிகள் கூட்டத்தில் இருப்பதாக விசுவாசிக்கிறேன். அப்படி இல்லைனாலும், அவர் சொன்னார், “அதில் கலந்துகொள்கிறேன் அதின் அங்கமாக இருக்கிறேன்.” அவருடைய மனைவி சமீபத்தில் தான் இரட்சிக்கப்பட்டார் என தெரியும். அதனால் அவரிடம் கேட்டேன், “ நீங்க இயேசுவ இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா?” அதை என்னால் மறக்கவே முடியாது. அவர் சொன்னார், “நா இப்ப செய்யறத நிறுத்திடுவேன்னு நினைக்கிறீங்களா,”அது என்னால, “முடியாது. ஏன்னா, நான், “இதிலிருந்து தப்பிக்க எந்த வழியும் இல்லைன்னாறு.” அதாவது, இதற்கு அடமைப்பட்டுவிட்டேன் என்பதை தான் அவர் சொல்லாம சொன்னார். நான் அவரிடம் சொன்னே, “நீங்க ஒரு பாவி என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவது அவசியம் என்றும் தேவனுடைய கிருபையை பெற்றவேண்டும் அப்போதுதான் தேவனால் ஏற்றுக்கொள்ளபடுவீர்கள் என தெரியுமா என்றேன்,” அவருடைய பதில், “தெரியும்”.

எனவே நான் விரும்பாத ஒரு காரியத்தை செய்ய வேண்டியிருந்தது. நான் கிருபையின் மீது பந்தயங்கட்டினேன். நான் சொன்னேன், “நீங்க ஏன் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள கூடாது. நீங்க புரிந்துகொள்ள வேண்டியது இதுதான், முதலாவதாக, நீங்க ஒரு பாவி. உங்களுக்கு நீங்களே இரட்சிப்பளிக்க முடியாது. நீங்கள உதவியற்றவராக தேவனுடைய இரக்கத்தை நாடி கிறிஸ்து உங்கள் பாவங்களை ஏற்றுக்கொண்டதை உணருங்கள் அதன் பிறகு அடிமைப்படுத்தின் மனைவிகள் சங்கத்தை பற்றி யோசிப்போம்.”

அன்று இரவே இயேசுவை ஏற்றுக்கொண்டார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது, “அவருடைய வாழ்க்கை மாறியதா என யோசித்தேன்.” 2 வாரங்களுக்கு பிறகு என்னை பார்க்க வேண்டுமென அனுமதிகேட்டார் ஆச்சரியமாயிருந்தது, “எதைப் பற்றி பேசப்போகிறோம்,” அதாவது அவருடைய ஒரே குறிக்கோள் அவர் ஊழியத்திற்கு போகவேண்டும் என்று விரும்பியதால் எந்த வேதாகம கல்லூரிக்கு செல்லலாம் என கேட்டார்.

இப்ப, கிருபையை குறித்த 2 வல்லமையான பாடங்கள் உள்ளது. முதலாவதாக, அவசியம் தேவை என்று இருப்பவர்களின் வாழ்க்கை முறை எப்படியிருந்தாலும் கிருபையானது அவர்களை அனுகக்கூடியதாயிருக்கிறது. கிருபை அவர்களுக்கு ஆயத்தமாயிருக்கிறது. ஆனா அடுத்த பாடம் என்னன்னா. தேவனுடைய கிருபையை பெற்ற பிறகு, நாம் முன்போலவே

ஒருபோதும் இருப்பதில்லை. அடுத்த நிகழ்ச்சியில் மறுபிறப்படைதல் என்றால் என்ன என்பதைக் குறித்து பேச இருக்கிறோம் அதோடு தேவன் நமக்கு அளிக்கும்  புதிய விருப்பங்கள் புதிய சுபாவத்தை பற்றி பார்ப்போம், புதிய நாட்டம், இந்த நபரை பொறுத்தவரை, அவருடைய பழைய வாழ்க்கைக்கு அவரால் போக முடியவில்லை. தேவன் புதிய முதன்மையான விஷயங்களை அவருக்குள் வைத்தார். அதுதான் கிருபை, அதனால் தான் அது மேலானதாகவும் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** இந்த பகுதியை முடிப்பதற்கு முன், கிருபையை விசுவாசித்த 2 நபர்களை குறித்து இயேசு கூறுகிறார்.

**லட்சர்:** ஓ! ஜான்! இது ஒரு வல்லமையான சம்பவம் இது லூக்கா சுவிசேஷத்தில் இருக்கிறது (லூக்கா 18:10 லிருந்து). இருவரும் கிருபையை விசுவாசித்தார்கள். இப்ப, இங்க ஒரு மனிதன் ஆலயத்திற்கு சென்று கூறுகிறான், “ உமக்கு நன்றி, தேவனே, நான் அடுத்தவர்களைப்போல இல்லை அவர்கள் விபச்சாரக்காரர், அநியாயக்காரர்களா, இருக்கிறார்கள். மேலும் அவன், வாரத்தில் 2தரம் உபவாசிக்கிறேன். நான் நல்லவன் என்றான்.” அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்தினான். அவன் கிருபையை விசுவாசித்தான். தேவனுடைய ஈவின் வல்லமையினால் இந்த நற்கிரியைகளை அவன் செய்ததாக அவன் விசுவாசித்தான்.

அங்கு இன்னொரு மனிதன் இருக்கிறான், ஆயக்காரன், தேவனை ஏறெடுத்த பார்க்ககூட அவனுக்கு தைரியமில்லாமல்

நின்றுகொண்டிருக்கிறான். அவன் பரலோகத்திற்கு நேராக கண்களை ஏறெடுக்கவில்லை, என்று வேதம் சொல்கிறது. ஆனால் அவன் தன்னையே நொருக்கி கூறுகிறான், "தேவனே என்மேல் இரக்கமாயிரும், நாம் பாவி!" இயேசு கூறுகிறார் முந்தினவன் அல்ல இந்த இரண்டாம் மனிதன் நீதிமானாகிய திரும்புகிறான்.

**ஆன்கர்பெர்க்:** அது வல்லமையுள்ளது ஏனென்றால் 2 பேர் கிருபையை விசுவாசித்தார்கள் ஆனால் ஒருவன் கிருபையை குறித்து தவறாக எண்ணமுடன் இருந்ததால் அவன் நீதியை அடையவில்லை.

**லட்சர்:** ஒருவன் அந்த கிருபை உன்னை சிறந்தவனாகச் செய்ய உதவிடும் என்று நம்பினான். மற்றவன் கிருபையை அதைவிட மேலானது என்று விசுவாசித்தான், தரைமட்டமாக இருப்பவரை கிருபை இரட்சிக்க வல்லது என்று நம்பினான், எந்த உதவியும் இன்றி இருப்பவர்களை கிருபை தாங்கிடும். இன்றைக்கும், இந்த நிகழ்ச்சி பார்த்துக்கொண்டிருப்பவர்களில், ஜான், இவர்களைப் போன்றவர்கள் இருக்கிறார்கள், "கொடுப்பதற்கு என்னிடம் எதுவுமே இல்லை. என் வாழ்க்கை சீரழிந்து போனது, நான் போக எனக்கு எந்த இடமுமில்லை. மற்றவர்களுடைய வாழ்க்கையை அழித்துவிட்டேன் என்றிடலாம்." எனக்கு சிறைசாலைகளில் இருப்பவர்களிடமிருந்து கடிதங்கள் வந்திருக்கிறது அவர்கள் செய்த கொடூரங்களை எழுதியனுப்புவார்கள், அவர்களுடைய யோசனையும் இதுதான், "எனக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை." இன்றைக்கு நான் அவர்களுக்கும்

சொல்லுகிறேன் உங்களுக்கு நம்பிக்கையளிக்கும் ஒன்று இருக்கிறது ஏனென்றால் கிருபை மேலானது. உண்மையில் இதைக் கேட்டுக்கொண்டிருக்கும் விசுவாசிகளை காட்டிலும் அவர்களுக்கு அதிக நம்பிக்கை உண்டாகும், சபைக்கு செல்வதால் எனக்கு பிரச்சனை இல்லை என்று நினைக்கலாம், தேங்க் யு, அப்படிபட்டவர்களுக்கு கைகொடுக்கும்படி கிருபை வருகிறது. ஆனா மற்றவர்களுக்கு தெரியும் கிருபை கைகொடுப்பதோடு, எனக்கு மேலான அற்புதங்களைச் செய்கின்றது.

**ஆன்கர்பெர்க்:** ஒருசில நிமிடங்களில் அவர்களுடன் சேர்ந்து நீங்கள் ஜெபிக்கவேண்டும். ஆனால் நேயர்களே, இதை கேட்டுக்கொண்டிருக்கிற நீங்கள், அவர் இதுவரை பேசிக்கொண்டிருந்த அந்த நற்செய்தியை விளங்கிக்கொண்டீர்களா? ஒருவேளை நீங்கள் நல்லவர்களாகவே இருக்கலாம். ஒருவேளை நீங்கள் சபைக்கு செல்கிறவர்களாக இருக்கலாம், அப்பப்ப உங்களுக்குள் ஒரு சந்தேகம் எழும்பியிருக்கலாம், “என்னால இதை செய்ய முடியுமா?” ஏன்னா நீங்க உங்க பானியில சில நற்கிரியைகளை செய்வதோடு உங்கள் எண்ணம், “சரி, தேவன் அதோடு சேர்த்துக்கொள்வார் என்பதே.” ஆனால் ஏதோவொரு விதத்தில் நீங்கள் சார்ந்துகொண்டவராக இருக்கிறீர்கள், இதுவும் உதவும் என்கிறீர்கள், அதுதான் உங்கள் நற்கிரியைகள். அதுதான் உங்களுடைய பிரச்சனை. உங்களால் செய்ய முடியும் என்று உங்களுக்கு தோன்றுகிற அனைத்தையும் ஒதுக்கிவிட்டு எல்லாவற்றையும் தேவன்

கிறிஸ்துவின் மூலமாக கொடுக்கிறார் என்பதை உணருங்கள். பிதாவிற்கு முன்பாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட தேவையான அனைத்தையும் கிறிஸ்து செய்துவிட்டார்.

அடுத்த காரியம், எனக்கும் தேவனுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று நினைக்கிற மக்கள் கூட்டத்தில் நீங்களும் ஒருவராக இருக்கலாம். கவனியுங்கள், அவர் உங்களை அதிகமாய் நேசிக்கிறார் என்பதை அறிந்துகொள்ளும் ஒளியில் இருக்கிறீர்கள், அவர் உங்களுக்கு அனைத்தையும் அருளிடுவார் - மன்னிப்பு, அவரோடு நமக்கிருக்கும் உறவு - இன்றைக்கு உங்களுடைய நம்பிக்கையை கர்த்தராகிய இயேசுவின் மீது வைத்தால் போதும். அப்படி செய்ய நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா, அப்படியானால், எர்வின், இதுவரை மற்றதை சார்திருந்த இவர்கள் அப்படிபட்ட யாவையும் விட்டுவிட்டு தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரும்படி அவர்களை ஜெபத்திலே நடத்துங்கள், பரலோகத்தில் பிரவேசிக்க, பாவங்கள் மன்னிக்கப்பட அவர்களுக்காக கிறிஸ்து செய்த ஏற்றுக்கொண்டு அவரில் விசுவாசமாயிருக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

**லட்சர்:** தட்ஸ் ரைட். ஜெபிப்போம். எங்கள் பிதாவே, இயேசு என்ற அற்புதத்திற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். அவர் மெய்யான பாவிகளை இரட்சிக்கிறதற்காக உமக்கு நன்றி, பாவிகளை மன்னிக்கிறார், இன்றைக்கு ஜெபிக்கிறோம், பிதாவே, இதை கவனித்து பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்காக வருகிறோம், இந்த ஜெபத்தை

ஏற்றெடுக்கும்படியான கிருபையை அவர்களுக்கு அளிக்கும்படியாக கேட்கிறோம்: என் தேவனே, நான் பாவி என்பதை அறிவேன். நான் பாவம் செய்திருக்கிறேன் என அறிவேன். ஆனால் இந்த நிமிடத்தில், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறேன். அவருடைய இரக்கத்தை நம்புகிறேன். என்னுடைய கிரியைகளினால் என்னுடைய செயல்களினால் உண்டானவற்றை சார்ந்திருப்பதை விட்டுவிட்டு, என்னை இரட்சிக்கவும் என் பாவங்களை ஏற்றுக்கொண்டவருமானர் மீது என்னுடைய விசுவாசத்தை வைக்கிறேன். அவரை ஏற்றுக்கொள்கிறேன் மேலும் அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் அவருடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுக்கிறார் என்ற வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்கிறேன் (யோவான் 1:12) இந்த ஜனங்களுக்கு உறுதியை அளித்திடும், விசுவாசத்தின் உறுதியை அளித்திடும், இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்."

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.